# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office பின்புறம்),
**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590


## விசாரணை நாள் 10.07.2026

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் SA 16763-E-2024**

திரு எபி தாமஸ் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/ .. பொது அதிகார அமைப்பு
அரசு துணை செயலாளர்,
நில அளவை 2(1) பிரிவு,
வருவாய் மற்றும் பேரிடர்
மேலாண்மை துறை,
சென்னை - 600 009

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (10.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு எபி தாமஸ் ஆஜராகவில்லை |
| தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7-ன்படி மனுதாரரின் வருகை கட்டாயமானதாகும். எனவே, அவரது வருகையின்மையை ஆணையம் பதிவு செய்கிறது | |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | சென்னை, தலைமை செயலகம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் பிரிவு அலுவலர் மற்றும் உதவி பொதுத் தகவல் அலுவலர் திரு எஸ்.தர்மராஜ் ஆஜரானார். |
| சட்டப்பிரிவு 6(1) மனு நாள் | 05.07.2024 |

| **<u>கோரிய தகவல்</u>**:- <br> பைமாஷ் எண்களை தற்போதுள்ள சர்வே எண்களோடு சம்மந்தப்படுத்தி தமிழ்நாடு வருவாய் துறை செயலர் வெளியிட்டுள்ள சுற்றறிக்கை / அரசாணை / அறிவிக்கையின் நகலை வழங்க வேண்டுமென்பது உட்பட 4 இனங்களில் தகவல் கோரியுள்ளார். | |
|---|---|
| துத் தகவல் அலுவலர் பதில் கடிதம் | இணைக்கப்பட்டுள்ளது |
| சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 02.09.2024 |
| சட்டப்பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாவது மேல்முறையீட்டு மனு நாள் | 23.12.2024 |

2) மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் சென்னை தலைமைச் செயலகம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில் தான் கோரிய தகவல்கள் மறுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து, சட்டப் பிரிவு 19(1)-ன் கீழ் முதலாம் மேல்முறையீட்டு மனுவையும். பின்னர் தனக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லையென தெரிவித்து, சட்டப்பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவையும் அனுப்பியுள்ளதை தொடர்ந்து, இன்று இந்த இரண்டாவது மேல்முறையீட்டு மனுவின் மீது விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

3) இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்கள் தொடர்பாக மனுதாரருக்கு 19.07.2024 அன்று பதில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்து, அதன் நகலை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

4) வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவை பிறப்பிக்கிறது:-

**மனுதாரர் 05.07.2024 நாளிட்டு அனுப்பியுள்ள 6(1) மனுவுக்கு 19.07.2024 அன்று அனுப்பப்பட்ட பதில் கடிதத்தில். மனுதாரர் கோரும் தகவல்கள் தெளிவில்லாமல் இருப்பதால், அவற்றை வழங்க இயலாது என்று பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்துள்ளார். இதை ஆணையம் ஏற்கவில்லை. மனுதாரர் கோருவது போல, பைமாஷ் எண்களை தற்போதுள்ள சர்வே எண்களோடு தொடர்புபடுத்தும் சுற்றறிக்கை அல்லது அரசாணை வெளியிடப்பட்டிருக்க வேண்டுமென ஆணையம் கருதுகிறது. ஆகவே, இப்பொருள் குறித்து அரசாணை அல்லது சுற்றறிக்கை ஏதேனும் வெளியிடப்பட்டுள்ளதா என்பதை பொதுத் தகவல் அலுவலர் மீண்டும் தேடிப்பார்த்து, அது கிடைக்கும்பட்சத்தில் மனுதாரருக்கு அதன் நகலை அனுப்ப வேண்டுமென்றும், அது கிடைக்கப்பெறாதப்பட்சத்தில், அது குறித்த உறுதி பிரமாண பத்திரத்தை மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலை இணைத்து ஒரு அறிக்கையாக இவ்வாணையத்தின் முன்பாக 20.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென சென்னை, தலைமை செயலகம், வருவாய் மற்றும் பேரிடர்**

**மேலாண்மை துறையின் பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது**.

**ஒம்/- (அபய் குமார் சிங்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண் SA 16763-E-2024**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
அரசு துணைச் செயலாளர்,
நில அளவை 2(1) பிரிவு,
வருவாய் மற்றும் பேரிடர்
மேலாண்மை துறை,
சென்னை - 600 009

திரு எபி.தாமஸ், த/பெ எம்.டி.தாமஸ்,
எண்.480-சி, பஜார் பிரதான சாலை,
ராம்நகர், மடிப்பாக்கம்,
சென்னை - 600 091

Copy to file
CR/PA